தலைப்பு - 151 கடற்றொழில் அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு 2020 ஆகஸ்ட் 31 வரை விவசாய அமைச்சின் கீழ் தொழிற்பட்டிருந்தமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகளாக ரூபா 9,587,110 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணனிக் குறிப்பிதழ்களின் படி (எஸ்ஏ – 52) முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,994,958 எனக் காணப்பட்டமையால் ரூபா 5,592,152 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்பிதழ்கள், 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கடற்றொழில் அமைச்சின் கீழ் கணக்கீடு செய்யப்பபட்ட பெறுவனவு களின் தொகையை மட்டுமே காட்டுகிறது. | மொத்த முற்பணப் பெறுவனவுகளும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகளாக ரூபா 7,433,796 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணனிக் குறிப்பிதழ்களின் படி (எஸ்ஏ – 52) முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 27,946,768 எனக் காணப்பட்டமையால் ரூபா 20,512,972 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்பிதழ்கள், 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கடற்றொழில் அமைச்சின் கீழ் கணக்கீடு செய்யப்பபட்ட கொடுப்பனவு களின் தொகையை மட்டுமே காட்டுகிறது. | மொத்த முற்பணக் கொடுப்பனவுகளும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்கையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களிலுள்ள ACA-6 அறிக்கையில் 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிசாராத சொத்துக்களின் பெறுமதி ரூபா 523,782,990 ஆகக் காண்பிக்கப் பட்டிருந்த போதிலும், திறைசேரி கணனிக் குறிப்பிதழ்ளின் படி (எஸ்ஏ - 82) அவ்வாறான ஆரம்பச் சொத்து மீதி பெறுமதி காண்பிக்கப்படவில்லை. | தற்போது அந்தத் தவறு திருத்தப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் திருத்தமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 605,570,552 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய் வாண்டிற்கான திறைசேரி அறிக்கையில் (எஸ்ஏ-82) அது ரூபா 57,290,189 எனக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 548,280,363 வேறுபாட்டை கணக்கிண க்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அந்தத் தவறு திருத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | நிதி அல்லாத சொத்துக்களுடன் தொடர்புடைய ACA -6 கூற்றினை பரிசோதிக்கையில் 2020 ஆம் ஆண்டிற்கான சொத்துக் கொள்வனவு களின் | ரூபா 194,792 பெறுமதியுடன் கூடிய நிலையான சொத் தொன்று நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காமையே இதற்கான காரணமாவதுடன் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 81,787,561 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிச் செயலாற்றில் கூற்றில் மூலதனச் சொத்துக்களின் கையேற்பு ரூபா 81,982,353 எனக் காண்பிக்கப்பட்டிருந்த மையால் ரூபா 194,792 வேறுபாடு காணப்பட்டது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி சரியானதாகும். | |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆவது வழிகாட்டலி லுள்ள 4.13 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குப் பொழிப்புகள் மூலம் அறிவிக்கப்பட்ட நிலையான சொத்துக் களின் பட்டோலையொன்று அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் ஆண்டின் போது கைக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 81,982,353 சொத்துக்கள் தொடர்பான பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட் டமைக்கான தகவல்கள் காணப்பட வில்லை. | ஏஸ்ஏ – 06 படிவத்தின் பிரதியொன்று பொது நிதிப் பணப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | - மேற்படி - |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அமைச்சு தயாரித்திருந்த காசுப் பாய்ச்சல் கூற்றினையும் பரீட்சை மீதியினையும் ஒப்பீடு செய்கையில் 09 விடயங்களுடன் தொடர்புடைய பெறுமதிகளிடையே ரூபா 2,077,438,762 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | காசுப் பாய்ச்சல் கூற்று நேரடியாக காசு அடிப்படை யிலும் ஒட்டுமொத்த ஆண்டு க்காகவும் தயாரிக்கப்பட்டு ள்ளதுடன் பரீட்சைமீதி யானது இறுதி 04 மாதங் களிற்கு அட்டுறு அடிப்படை யில் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுரியாக பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டு அதன்படி காசப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6.4 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,625,268 ஆன வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக் கவில்லை. | 02 வருட காலத்தை தாண்டிய வைப்புக்களில் ரூபா 362,098. 47 மில்லியன் வைப்புத் தொகைகள் 2021 மார்ச் இல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட் டுள்ளதுடன், மீதமுள்ள வைப்புத் தொகைகள் தேவையான உறுதிப்ப டுத்தல்களைப் பெற்ற பின்னர் செயலாக்கப்படும். | பரிசேதனை மேற் கொண்ட பின்னர் காலம் கடந்த வைப்புக்கள் அரசாங்க வருமான த்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |

## 1.6.5 கணக்காய்விற்கான சான்று இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வட மாகாண நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்திற்காக திறைசேரியால் நேரடியாக செலவிடப்பட்ட ரூபா 43,399,817 ஏனைய மூலதனச் செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டத்தின் 2020 ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றின் படி நிதியளிக்கப்பட்ட கடன் தொகை ரூபா 19,044,912 ஆக மாத்திரம் காணப்பட்டமையால் ரூபா 24,354,905 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டுக் கடன்களின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 43,399,817 குறித்த தகவல்களை அமைச்சு வழங்கத் தவறியமையினால், கணக்காய்வின் போது அதனை திருப்திகரமாக செவ்வைபார்க்க முடியவில்லை. | அமைச்சின் பேரேட்டில் திறைசேரியால் நேரடியாக செலவிடப்பட்டுள்ள ரூபா 43,399,817 ஆன இந்தத் தொகை குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | செலவினம் தொட ர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுத ல் வேண்டும். |
| (ஆ) | கோவிட் தொற்றுநோய் காரணமாக சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பேலியகொட மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான அபிவிருத்தி சலுகைகளின் கீழ் அவசரகால புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட ரூபா 50,000,000 செலவினங்கள் தொடர்பில் | இந்த ரூபா 50 மில்லியன் தொகையானது உப கட்டுநிதியாக பேலிய கொட மத்திய மீன் சந்தை தொகுதிக்கு | அமைச்சினால் கட் டுநிதி மீள்நிரப்பல் செய்யப்பட வேண்டு மென்பதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கான தகவல்கள் காணப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ளதுடன், கட்டுநிதி செலவினங்கள் பற்றிய தகவல்கள் மத்திய மீன் சந்தை தொகுதியிடம் காணப்படுகின்றது. | இறுதி பின்தொடர் நடவடி க்கைளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மீன்பிடி துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டம் ஆகியவற்றுடன் தொடர்புடைய மொத்த வைப்புத்தொகை பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் வைப்புத்தொகை இலக்கங்கள் குறிப்பிடப்படாத மொத்த வைப்புப் பணம் உள்ளிட்ட ரூபா 60,114,465 மொத்தப் பெறுவனவுகள் மற்றும் ரூபா 277,753,372 மொத்தக் கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடற்றொழில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்குரிய அனைத்து பொது வைப்புத்தொகை களும் கடற்றொழில் அமைச் சின் கணக்கில் காணப்பட்ட துடன், சிகாஸ் திட்டத்தின் மூலம் அந்த வைப்புத் தொகைகளை இரு நிறுவனங்களுக்கிடையில் மாற்றுவதற்கு அமைச்சு வசதி செய்திருக்காததடன் அச்செயற்பாடு திறைசேரி யின் ஊடாக மேற்கொள்ள ப்பட்டது. | அனைத்து தொடர்புடைய தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் கடற்றொழில் அமைச்சின் 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையிலான ரூபா 265,704,593 செலவினத்திற்கு உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படாமையால் அச்செலவினத்தை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | நிதிப்பிரமாணம் 272 (3) இன் பிரகாரம் அனைத்து கொடுப் பனவு உறுதிச்சீட்டு க்களும் கணக்கா ய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுத ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அபிவிருத்திச் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை ஆய்த்றிவதற்காக அமைச்சின் உத்தியோகத்தர்களை நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அதிகளவில் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக ரூபா 3,272,824 செலவிடப்பட்டிருந்த போதிலும், | 2020 இன் அமைச்சரவை அலுவலக செயற்திட்டத் தின் கீழுள்ள 1101 பிரயாணச் செலவின விடயத்திற்காக ஒதுக்கப் பட்டிருந்த நிதி ஏற்பாடு | பிரயாணச் செலவி னத்திற்காக செலவி டப்பட்ட அபிவிருத் திச் செயற்திட்ட ங்களின் செயல் |

| | | |
|---|---|---|
| இவ்வாண்டு முடிவடைந்து 7 மாதங்கள் கடந்த பின்னரும் கூட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செலவினத்தை கணக்கீடு செய்வதற்கு போதுமானதாக இல்லாமை யால் 2020 இற்குரிய செயல் முன்னேற்றம் உரிய அறிக்கைகளுடன் சமர்ப்பிக் கப்படும். | முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடற்றொழில் அமைச்சின் கடற்றொழிலா ளர்களை பலப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 23,870,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து ரூபா 23,791,914 செலவிடப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா 4,979,666 தொகையினை திருகோணமலை மாவட்டச் செயலகத்திற்கு செலுத்துவதற்காக கடப்பாடு ஏற்படுத்தப்பட் டிருந்தது. நிதி ஏற்பாட்டிலிருந்தான சேமிப்பு ரூபா 78,086 ஆக காணப்பட்டமையால் நிதி ஏற்பாட்டைக் காட்டிலும் ரூபா 4,901,580 கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு குறைவாகக் காணப்பட்டமை யால் நிதி ஏற்பாட்டை மிகைத்து கடப்பாடு ஏற்படு த்தப்பட்டிருந்தமை அவதானக் கப்பட்ட போதிலும், நிதி ஏற்பாட்டை மிகைத்து செலவு கள் செய்யப்படவில்லை. | நிதி ஏற்பாட்டின் அளவுக்கு மாத்தி ரம் கடப்பாடு ஏற்படுத்தப்படுதல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் கட்டிட நிர்மாண ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதுடன் தொடர்புடைய செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறி என்பன 2019 செப்தெம்பர் 12 ஆந் திகதி காசாக்கப்பட்டமையால் கிடைத்திருந்த ரூபா 55,677,614 தொகையை நேரடியாக அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்க வேண்டிய போதிலும், ஓராண்டுக்கு மேல் கடந்த பின்னரும் அரசாங்க வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தத் தொகை தற்காலிகமாக பொது வைப்புக்கள் பதிவேட்டில் வைக்கப்பட்டுள்ளதுடன் தேவையான விளக்கங்கள் பெறப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தை இரத்துச் செய்வ துடன் தொடர்பு டைய முற்பண பிணைமுறி அரசா ங்க வருமானத்தி ற்கு எடுக்கப்படு தல் வேண்டும். |

**2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டதற்கான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடற்றொழில் அமைச்சில் சிறந்த நிதிக் கட்டுப்பாட்டையும் உள்ளகக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக நி.பி. 135 இன் கீழுள்ள அதிகாரப் பகிர்வுகள் மேற்கொ ள்ளப்பட்டு உத்தியோகத்தர்க ளிடையே உரியவாறு வேலை கள் ஒப்படைக்கப்பட்டுள்ள துடன் கோவிட் நோய்த் தொற்றுக்கு மத்தியிலும் கூட கணக்காய்வு மற்றும் முகாமை த்துவ குழுக் கூட்டங்களும் செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும் ஆண்டின்போது நடாத்தப்பட்டன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கா ய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு உரிய காலப்பகுதியில் அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலளிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்குரிய 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கோவிட் நோய்த்தொற்று நிலைமையின் கீழ் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்த மையால் 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்க தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் விரைவாக அவற்றுக்கு பதிலளிக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கா ய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழிலாளர்களை பலப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 23,870,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்டிருந்த | 2019 இல் நடைமுறைப்படுத்திய செயற்திட்டங்களினது கைவச முள்ள பட்டியல்களை தீர்ப்ப | 2020 இல் மேற்கொள் ளப்பட்ட நிதி ஏற்பாடு அந்த ஆண்டிற்குரிய பணிகளுக்காகவே |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 23,791,914 தொகையில் ரூபா 22,291,974 தொகை 2019 இல் மேற்கொள் ளப்பட்ட செயற்திட்டங்களினது கைவசமு ள்ள பட்டியல்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தற்காக 2020 இல் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு பன்படுத்தப்பட்டது. | பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை எதிர்பார்த்திருந்த இறால் தனிமைப்படுத்தல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் (அடிப்படை பணி) மற்றும் கடல் அட்டை கிராமத்திற்கான நில அளவைகள் போன்ற பணிகளை செய்வதவற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,700,000 நிதி ஏற்பாடு 2020 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் நடைமுறைப்படுத் துவதற்கு உத்தேசித்திருந்த செயற்திட்டங்களை நடைமுறை ப்படுத்த முடியாது போயிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி உத் தேசித்திருந்த செயற்தி ட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகளை பயன்ப டுத்துதல் வேண்டும். |
| (இ) | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக (53-2506) 2020 ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 33,630,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 31,961,270 தொகை தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீன் குஞ்சு உற்பத்தியை (Fish Seed Production) அதிகரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், இலக் கிடப்பட்ட பணிகள் இடம் பெற்றனவா என்பது தொடர்பில் பின்தொடர் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதி ஏற்பாடு பயன் படுத்தப்பட்டு செலவி டப்பட்ட செயற்திட்டங் களின் செயல் முன்னேற்றம் பரீட்சிக் கப்படுதல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்று மட்டங்களை அடைந்திருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுக்காக கடலோர பாதுகாப்பு மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிர்மாண நடவடிக்கைகளிற்காக ரூபா 44,500,000 தொகையான நிதி ஏற்பாடு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 வரையான செலவினம் ரூபா 27,290,360 ஆகும். 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி குறித்த நிதி ஏற்பாட்டின் கீழ் இலங்கை நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மன்னார் | பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதி ஏற்பாடு பயன் படுத்தப்பட்டு செலவி டப்பட்ட செயற்திட்டங் களின் செயல் முன்னேற்றம் பரீட்சிக் கப்படுதல் வேண்டும். |

மாவட்டத்தில் கடல் அட்டைகளுக்கான இனவிருத்தி கட்டிட நிர்மாணம், புத்தளம் மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்புக்கான இனவிருத்தி கட்டிட நிர்மாணம் மற்றும் பம்பல உவர்நீர் இறால் இனவிருத்தி கட்டிட மேம்படுத்தல் ஆகிய பணிகளிற்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளின் நிதிச் செயல் முன்னேற்றம் 61 சதவீதமாகக் காணப்பட்டதுடன், செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றனவா என்பது செயல் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்படாதிருந்ததுடன், அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை.

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் படி, பொது நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் 14 இன் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படியான வருடாந்த செயலாற்றல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கா ய்வு அபிப்பராயம் கிடைத்தவுடன் அது பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படு தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமத்தொழில் காப்புறுதிச் சபையும் நீரியல் வளங்கள் திணைக்களமும் இணைந்து மாவட்ட கடற்றொழில் செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு 1991 மார்ச் 19 ஆந் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மீனவர்களிற்காக அறிமுகப்படுத்த ப்பட்ட நலத் திட்டத்தின் பணிகள் மெதுவாகவும் புதுப்பிக்கப்படாமலும் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகா ரம் இந்த திட்டத்தை நாளதுவரையாக மேற்கொள்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக வருடாந்தம் ரூபா 1,500,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டத்திற்கு புதிய மீனவர்களை சேர்த்துக் கொள்ளல் கடந்த 7 வருடங்களாக இடம்பெறாதிருந்ததுடன், இந்த நலத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்யும் மீனவர்களின் பட்டியலொன்றை அமைச்சு பராமரித்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்யும் மீனவர்களின் பட்டியலொன்றை பராமரித்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை வங்கியின் பெருநகரக் கிளையில் உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தின் சாவிகள் காணாமல் போயிருந்ததுடன் அது 2012 ஆம் ஆண்டு முதல் செயலிழந்திருந்தது. இந்த பெட்டகத்தின் சாவிக்காக ரூபா 7,000 கட்டணமும் நிலுவை வாடகைக்காக ரூபா 66,656 என்ற வகையில் மொத்தமாக ரூபா 73,656 தொகை இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அது இனங்கா ணப்பட்ட நிதிசார் நட்டமொன்றாக அவதானிக்கப்படுகின்றது. அத்துடன் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 103(1) இன்படி இழப்புக்கு காரணமான அதிகாரிகளிடம் இருந்து இந்தத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் அலட்சியத்தால் ஏற்பட்ட இந்த இழப்பு குறித்து நிதிப்பிரமாணம் 156 இன்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | இதனுடன் சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு முன்னர் பொறுப்புவாய்ந்த உத்தியோ கத்தர்கள் குறித்து தேடியறி யப்பட்டதுடன் பெட்டகம் தொடர்பில் இலங்கை வங்கியுடன் உடன்படிக்கை யில் கைச்சாத்திட்ட முன்னாள் கடற்றொழில் அமைச்சில் பணியாற்றிய உத்தியோகத்தர் தற்போது உயிருடன் இல்லை என்பதால் குறித்த சாவியும் காணாமல் போயுள்ளது. இலங்கை வங்கி அறிவிக்கும் வரை அவ்வாறான பெட்டக மொன்று வாடகைக்கு பெறப்பட்டமை குறித்து அமைச்சிலுள்ள தற்போ தைய அறிந்திருக்கா மையால் இந்த நிலுவைத் தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக் கப்படுதல் வேண் டும். |
| (ஈ) | தினமின மற்றும் திரைகரன் பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக அமைச்சினால் சமர்ப்பிக் கப்படுகின்ற ஒருவெல்ல பத்திரிகையை அச்சிடுவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 7,290,000 தொகையை அமைச்சு செலுத்தியிருந்தது. இத்தகைய செய்தித் தாளை அச்சிடுவதற்காக கடந்த பல ஆண்டுகளாக பணம் | 2018 நவம்பர் முதல் அச்சிடுதல் நிறுத்தப்பட்டுள் ளதுடன் 2020 சனவரி முதல் மீண்டும் அச்சிடப்பட்டதுடன் செய்தித்தாளை வெளியிடும் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் அடையப்பட் | செய்தித்தாளை அச்சிடுவதனால் பெற்றுக் கொள்ளப்ப ட்டுள்ள செயலாற் றல் குறித்து பின்தொடர்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த செய்தித்தாளை வெளியிடும் குறிக்கோள்கள் மற்றும் அடையப்பட்ட இலக்குகள் குறித்து எந்த விதமான பின்தொடர்தல்கள் அல்லது செயற்பாட்டு மீளாய்வுகள் மேற்கொள்ளப் பட்டதற்கான தகவல்கள் வெளிப்படுத்தப்ப டவில்லை.

டமை குறித்து பின்தொடர் தல்களை மேற்கொள்தல் அந்த குறுகிய காலத்தில் செய்ய முடியாதுள்ளமை யால் எதிர்காலத்தில் அதனைச் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.